ஆர். ஒ. வி. நம்பர். 17/48/ L. A.

விளம்பரம்

திருவிதாங்கூர் சட்ட நிருமாண அசெம்பிளி குறித்த விதிகளிலே 26-வது விதியின்படி அடியிற்காணும் மசோதாவானது, உத்தேச காரண விவரம் சகிதம், தவ்வரது ஆணைக்கிணங்க, பிரசுரிக்கப்படுகிறது.

அசெம்பிளி ஆபீஸ்,
திருவனந்தபுரம்,
1948 மே 25-ம் உ.

வி. கிருஷ்ணமூர்த்தி அய்யர்,
சட்ட நிருமாண அசெம்பிளி
காரியதரிசி.

திருவிதாங்கூர் கைத்தொழில் உத்தியோகம் பற்றிய (நிலையான உத்தரவுகள்) மசோதா.

கைத்தொழில் ஸ்தாபன முதலாளிகள் தம் கீழ்வேலைக்கு ஆள் அமைப்பது பற்றிய நிபந்தனைகளை வரையறுக்குமாறு சட்ட பூர்வமாய் வேண்டுதற்கான ஒரு மசோதா.

பீடிகை.

கைத்தொழில் ஸ்தாபன முதலாளிகள் தம் கீழ்வேலைக்கு ஆள் அமைப்பது பற்றிய நிபந்தனைகளை வேண்டுமட்டும் சரிவர வரையறுக்குமாறும், தம் கீழ் வேலையில் அமரும் தொழிலாளிகளுக்கு அந்த நிபந்தனைகளை அறிவுறுத்துமாறும் கோருவது யுக்தமாயிருக்கிறபடியால்;

இதனால் அடியிற்காணுமாறு விதிக்கப்படுகிறது:—

சுருக்கமான பெயரும் வியாபகமும் பிரயோகமும்.

1. (1) இவ் ஆக்டை, 112......ம் ஆண்டத்திய திருவிதாங்கூர் கைத்தொழில் உத்தியோகம் பற்றிய (நிலையான உத்தரவுகள்) மசோதா என்று சொல்லலாம்.

(2) இது திருவிதாங்கூர் முழுதும் வியாபிக்கும்:

(3) ஐம்பதோ அதற்கு மேற்பட்டோ தொழிலாளிகள் வேலையில் அமர்த்திக் கொள்ளப்படுகிற அல்லது கழிந்த பன்னிரண்டு மாதங்களில் ஏதேனும் தினத்தில் வேலையில் அமர்ந்திருந்த ஒவ்வொரு கைத்தொழில் ஸ்தாபனத்துக்கும், நமது கவெர்ன்மென்டார் நமது கவெர்ன்மென்ட் கெஸெட் விளம்பரத்தின் மூலம் இது

விஷயமாய் அவ்வப்போது குறிப்பிடுகிற வகையிற்பட்ட அல்லது வகைகளிற் பட்ட வேறு கைத்தொழில் நிலையங்களுக்கும் இது பிரயோகப்படும்.

பொருள்விளக்கம் 2. இவ்வாக்டில், விஷயத்திலாவது சந்தர்ப்பத்திலாவது முரண்பாடு இல்லாவிட்டால் (a) "அப்பீல் அதிகாரி" என்றால் நமது கவெர்ன்மென்டார் நமது கவெர்ன்மென்ட் கெவட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன்மூலம், அவ்விளம்பரத்தில் குறிப்பிடக்கூடிய பிரதேசத்தில் இவ்வாக்டின்படி ஒரு அப்பீல் அதிகாரிக்குரிய அலுவல்களை ஆற்றுமாறு நியமிக்கப்படும் ஒரு அதிகாரி என்று பொருள்படும்.

(b) "சாட்சிப்படுத்தும் உத்தியோகஸ்தர்" என்றால் லேபர் கமிஷனர் என்று பொருள்படும்.

(c) "முதலாளி" என்றால், இவ்வாக்ட் அவ்வப் போது பிரயோகப்படும் யாதொரு கைத்தொழில் ஸ்தாபனத்தின் சொந்தக்காரர் எனப்பொருள்படும், மேலும் அதில்:—

(i) ஒரு தொழிற்சாலையின் விஷயத்திலே, 1114-ம் ஆண்டத்திய திருவிதாங்கூர் தொழிற்சாலைகளைக் குறித்த ஆக்ட்(1114-ம் ஆண்டத்து 8-வது ஆக்ட்), 9-வது வகுப்பு, (1)-வது உள்வகுப்பைச் சேர்ந்த (f) பகுதியின்படி தொழிற்சாலை மானேஜர் என்று சொல்லப்படும் யாதொரு நபர் என்பதும்,

(ii) நமது கவெர்ன்மென்டு இலாகா யாதொன்றின்மேல் விசாரணையின்கீழ் உள்ள யாதொரு கைத்தொழில் ஸ்தாபனத்தின் விஷயத்திலே, இக்காரியத்திற்கென நமது கவெர்ன்மென்டார் நியமிக்கும் அதிகாரி அல்லது அங்ஙனம் எவ் அதிகாரியும் நியமிக்கப்படாவிடத்து, இலாகாத் தலைவர், என்பதும்.

(iii) வேறு யாதேனும் கைத்தொழில் ஸ்தாபனத்தின் விஷயத்திலே, அந்தக் கைத்தொழில் ஸ்தாபனத்தின் மேற்பார்வைக்காகவும் மேல்விசாரணைக்காகவும் சொந்தக்காரருக்குப் பொறுப்பாயுள்ள யாதொரு நபர் என்பதும்,

அமையும்.

(d) "கைத்தொழில் ஸ்தாபனம்" என்றால்:-

(i) கூலி கொடுப்பதைக் குறித்த 1116-ம் ஆண்டைத்திய திருவிதாங்கூர் ஆக்ட் (1116-ம் ஆண்டைத்து 20-வது ஆக்ட்), 2-வது வகுப்பு (ii)-வது பகுதியில் வரையறுக்கப்பட்டவாறுள்ள ஒரு கைத்தொழில் ஸ்தாபனம் என்றோ,

(ii) 1114-ம் ஆண்டைத்திய 8-வது ஆக்டாகிய திருவிதாங்கூர் தொழிற்சாலைகளைக் குறித்த ஆக்ட், 2-வது வகுப்பு (j) பகுதியில் வரையறுக்கப்பட்டவாறுள்ள ஒரு தொழிற்சாலை என்றோ,

(iii) திருவிதாங்கூர் ரெயில்வே ஆக்ட் (1115-ம் ஆண்டைத்து 22-வது ஆக்ட்), 2-வது வகுப்பு (1)-வது பகுதியில் வரையறுக்கப்பட்டவாறுள்ள ஒரு ரெயில்வே என்றோ,

(iv) யாதொரு கைத்தொழில் ஸ்தாபனத்தின் சொந்தக்காரரோடுள்ள ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றும் பொருட்டு தொழிலாளிகளை வேலையில் அமர்த்திக் கொள்ளும் ஒரு நபரது ஸ்தாபனம் என்றோ,

பொருள்படும்.

(e) "நிர்ணயிக்கப்பட்ட" என்றால், இவ்வாக்டின்படி நமது கவர்ன்மெண்டார் இயற்றும் விதிகளால் நிர்ணயிக்கப்பட்ட என்று பொருள்படும்.

(f) "நிலையான உத்தரவுகள்" என்றால், பட்டிகையில் விவரித்துள்ள விஷயங்கள் சம்பந்தித்த விதிகள் என்று பொருள்படும்.

(g) "தொழிற்சங்கம்" என்றால், 1112-ம் ஆண்டைத்திய திருவிதாங்கூர் தொழிற் சங்கங்களைக்குறித்த ஆக்டின்படி (1112-ம் ஆண்டைத்து 8-வது ஆக்ட்) அவ்வப்போது பதிவு செய்யப்படும் ஒரு தொழிற்சங்கம் என்று பொருள்படும்.

(h) "தொழிலாளி" என்றால், கூலிக்காவது கைம்மாறுக்காவது யாதொரு கைதேர்ந்த வேலையையோ கைதேரா வேலையையோ மெய்யுழைப்பு வேலையையோ எழுத்து வேலையையோ புரியுமாறு யாதொரு கைத்தொழில் ஸ்தாபனத்தில் வேலையில் அமர்த்தப்பட்ட யாதொரு நபர்.

3. (1) இவ்வாக்ட் யாதொரு கைத்தொழில் ஸ்தாபனத்துக்கு செல்லத்தக்கதாகும் தேதியிலிருந்து ஆறுமாதத்துக்குள் முதலாளி, தமது கைத்தொழில் ஸ்தாபனத்தில் மேற்கொள்ளக் கருதும் நிலையான உத்தரவுகளின் நகலுக்கு ஐந்து பிரதிகளை சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தருக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

நிலையான உத்தரவுகளின் நகல் சமர்ப்பிப்பது

(2) அந்தக் கைத்தொழில் ஸ்தாபனத்துக்குப் பிரயோகப்படத்தக்கதாய் பட்டிகையில் விவரித்திருக்கும் எல்லாக் காரியங்களையும் பற்றி அத்தகைய நகலில் நிபந்தனை கண்டிருக்கவேண்டும்; மேலும், மாதிரி நிலையான உத்தரவுகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கு மிடத்து, அந்த நிபந்தனைகள், கூடுமானமட்டில், அம்மாதிரியை அனுசரித்திருக்க வேண்டும்.

(3) கை கைத்தொழில் ஸ்தாபனத்தில் வேலையிலமர்த்திக் கொள்ளப்பட்ட தொழிலாளிகள் பற்றிய நிர்ணயிக்கப்பட்ட விவரங்களில், அவர்கள் சேர்ந்திருக்கும் தொழிற் சங்கம் ஏதேனுமிருந்தால் அதன் பெயரையும் உட்படுத்தி ஒரு விவரக்குறிப்பு தயாரித்து, அதை இவ்வாக்டின்படி சமர்ப்பிக்கப்படும் நிலையான உத்தரவுகளின் நகலோடு சேர்த்தனுப்பவேண்டும்.

(4) நிர்ணயிக்கப்படக் கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரேமாதிரியான கைத்தொழில்ஸ்தாபனங்களிலுள்ள முதலாளிவர்க்கத்தார் இவ்வகுப்பின்படி நிலையான உத்தரவுகளின் கூட்டுநகல் ஒன்றை சமர்ப்பிக்கலாம்.

4. (a) கைத்தொழில் ஸ்தாபனத்துக்குச் செல்லக்கூடியதாய் பட்டிகையில் விவரித்திருக்கும் எல்லா விஷயங்களுக்கும் நிலையான உத்தரவுகளில் நிபந்தனை கண்டிருந்தாலும்,

(b) நிலையான உத்தரவுகள் இவ்வாக்டிற் கண்ட நிபந்தனைகளுக்கு மற்றுவகையில் ஒத்திருந்தாலும்,

நிலையான உத்தரவுகளைச் சாட்சியப்படுத்துவது பற்றிய நிபந்தனைகள்.

அவை இவ்வாக்டின்படி சாட்சியப்படுத்தக் கூடியதாகும்; மேலும் நிலையான உத்தரவுகள் எவற்றிலாவது கண்டிருக்கும் நிபந்தனைகளின் நேர்மை அல்லது நியாயப்பான்மை குறித்து தீர்ப்பு அளிப்பது சாட்சியப்படுத்தும் உத்தி

யோகஸ்தரது அல்லது அப்பீல் அதிகாரியினது அனுவலாயிராது.

நிலையான உத்தரவுகளை சாட்சியப்படுத்துவது.

5. (1) 3-வது வகுப்பின்படி நகல்வரப் பெற்றுக் கொண்டதும், சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தரானவர், அதன் பிரதியொன்றை தொழிலாளிகளின் தொழிற்சங்கம் ஏதேனுமிருந்தால் அதற்கு அல்லது அங்ஙனம் யாதொரு தொழிற் சங்கமுமில்லையானால், நிர்ணயிக்கப்படும் விதத்தில் தொழிலாளிகளுக்கும் அனுப்ப வேண்டும். மேலும் அவர் அந் நகலோடுகூட, அந்த நகல்பற்றி தொழிலாளிகள் கூறவிரும்பும் ஏதேனும் ஆட்சேபங்களை நோட்டீஸ் வரப்பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து பதினைந்து தினங்களுக்குள் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு கோரும் ஒரு நோட்டீசை நிர்ணயிக்கப்படும் மாதிரியில் தயாரித்து அனுப்பவேண்டும்.

(2) முதலாளிக்கும், தொழிற்சங்கம் அல்லது நிர்ணயிக்கப்படக் கூடியவாறுள்ள தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும், அவர்கள் சொல்லிக்கொள்ள வேண்டியவற்றைச் சொல்லிக்கொள்ள வசதி ஏற்படுத்திக் கொடுத்த பிறகு, சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தரானவர், நிலையான உத்தரவுகளின் நகலை இவ்வாக்டின் சாட்சியப் படுத்தத்தக்க, தாக்க முதலாளி சமர்ப்பித்திருக்கும் நகலில்யாதொரு மாறுபாடு செய்வதோ புதியன புகுத்துவதோ அவசியமா அல்லவா என்பதைத் தீர்மானித்து அதற்கேற்ப எழுத்துமூலமான ஓர் உத்தரவுபிறப்பிக்க வேண்டும்.

(3) அதன்மேல், (2)-வது உள் வகுப்பின் படிக்கான தமது உத்தரவு தேவைப்படக்கூடியவாறு நிலையான உத்தரவுகளின் நகலில் எவையேனும் மாறுபாடுகளைச் செய்தபின் சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தர் அதை சாட்சியப் படுத்தவேண்டும், மேலும் அதன்பின் ஏழுதினங்களுக்குள், சாட்சியப்படுத்தப்பட்ட நிலையான உத்தரவுகளை நிர்ணயிக்கப்படுமாறு அத்தாட்சிப் படுத்தி அதன் பிரதிகளையும் (2)-வது உள் வகுப்பின்படியுள்ள தமது உத்தரவின் பிரதிகளையும் அவர், முதலாளிக்கும் தொழிற் சங்கம் அல்லது நிர்ணயிக்கப் பட்டதொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் அனுப்ப வேண்டும்.

6. (1) 5-வது உள்வகுப்பு (2)-வது உள்வகுப்பின்படி சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தர் பிறப்பித்த உத்தரவினால் திங்குற்ற எந்த நபரும், அவ்வகுப்பின் (3)-வது உள்வகுப்பின்படி பிரதிகள் அனுப்பப்பட்ட தேதியிலிருந்து இருபத்தொரு தினங்களுக்குள் அப்பீல் அதிகாரியிடம் அப்பீல் கொடுக்கலாம்; சாட்சியப்படுத்தும் அதிகாரி சாட்சியப்படுத்திய ரூபத்திலோ நிலையான உத்தரவுகள் இவ்வாக்டின்படி சாட்சியப்படுத்தத்தகுந்தது என்றாக்க இன்ன மாறுபாடுகளைச் செய்வது அல்லது இன்னவற்றைச் சேர்ப்பது அவசியமென்று அவ்வதிகாரி கருதுகிறதோ அவற்றைச் செய்வதன்மூலம் நிலையான உத்தரவுகளைத் திருத்தியமைத்த பிறகோ அந்த நிலையான உத்தரவுகளை அப்பீல் அதிகாரி எழுத்து மூலமான உத்தரவுகொண்டு உறுதிப்படுத்த வேண்டும்; அவ் அதிகாரியினது உத்தரவு முடிவானதாகும்.

அப்பீல்கள்

(2) (1)-வது உள்வகுப்பின்படி அப்பீல் அதிகாரி உத்தரவிட்ட ஏழு தினங்களுக்குள் அவர், அதன் பிரதிகளை சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தருக்கும் முதலாளிக்கும் தொழிற் சங்கம் அல்லது நிர்ணயிக்கப்பட்ட தொழிலாளர் பிரதிநிதிகளுக்கும் அனுப்பவேண்டும்; மேலும், சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தர் சாட்சியப்படுத்தியவாறுள்ள நிலையான உத்தரவுகளை அப்பீல் அதிகாரி யாதொரு திருத்தமுமின்றி உறுதிப்படுத்தியிருந்தாலொழிய டை பிரதிகளோடு கூட, டை அதிகாரி சாட்சியப்படுத்தியவாறும் நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் அத்தாட்சிப்படுத்தியுமுள்ள நிலையான உத்தரவுகளின் பிரதிகளும் அனுப்பப்பட வேண்டும்.

நிலையான உத்தரவுகள் ஊர்ஜிதத்துக்கு வரும் தேதி.

7. 6-வது வகுப்பின்படி ஒரு அப்பீல் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, நிலையான உத்தரவுகளின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகள் 5-வது வகுப்பு (3)-வது உள்வகுப்பின்படி அனுப்பப்பட்ட தேதியிலிருந்து முப்பது தினங்கள் முடிவுற்றதும் அல்லது மேலே கண்டபடி அப்பீல் கொடுக்கப்பட்டிருக்கும் விஷயத்தில், அப்பீல் அதிகாரியின் உத்தரவுகளது பிரதிகள் 6-வது வகுப்பு (2)-வது உள்வகுப்பின்படி அனுப்பப்பட்ட தேதியிலிருந்து ஏழு தினங்கள் முடிவுற்றதும், நிலையான உத்தரவுகள் ஊர்ஜிதத்துக்கு வர வேண்டும்.

நிலையான உத்தரவுகளின் ரெஜிஸ்டர்.

8. இவ்வாக்ட் அனுசரித்து முடிவாக சாட்சியப்படுத்தப்பட்ட படியுள்ள எல்லா நிலையான உத்தரவுகளுடைய ஒரு பிரதியானது, நிர்ணயிக்கப்பட்ட ரீதியில் இதற்கென வைத்திருக்கப்படும் ஒரு ரெஜிஸ்டரில் சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தரால் தாக்கல் செய்யப்பட வேண்டும்; மேலும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தி ஒரு பிரதிக்காக விண்ணப்பம் செய்கிற எந்த நபருக்கும் சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தர் அதைக் கொடுக்கவேண்டும்.

நிலையான உத்தரவுகளை விளம்பரப்படுத்துதல்.

9. இவ்வாக்டின்படி முடிவாக சாட்சியப்படுத்தப்பட்டவாறுள்ள நிலையான உத்தரவுகளின் மூலத்தை, ஆங்கிலத்திலும் அவரது தொழிலாளரில் பெரும்பான்மையோர் அறியும் பாஷையிலும் தயாரித்து, கைத்தொழில் ஸ்தாபனத்தினுள் பெரும்பான்மையான தொழிலாளர் பிரவேசிக்கின்ற வாசலில் அல்லது அதன் பக்கத்திலும் தொழிலாளர் வேலை செய்யும் கைத்தொழில் ஸ்தாபனத்தின் எல்லா இலாகாக்களிலும் இக்காரியத்துக்கென வைத்திருக்கப்படும் பிரத்தியேக போர்டுகளில் அதைப் பதித்துவைக்கவேண்டும்.

நிலையான உத்தரவுகளின் காலாவதியும் மாறுபாடுகளும்.

10. (1) இவ்வாக்டின்படி முடிவாக சாட்சியப்படுத்தப்பட்ட நிலையான உத்தரவுகள், முதலாளியும் தொழிலாளரும் தம்முள் உடன்பட்டாலன்றி, நிலையான உத்தரவுகளோ அதன் கடைசி மாறுபாடோ ஊர்ஜ்ஜிதத்தில் வந்த தேதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடையு முன் மாறுபடுத்தப்படக் கூடாது.

(2) தனது நிலையான உத்தரவுகளை மாறுபாடு செய்ய விரும்பும் ஒரு முதலாளி, தாம் கருதியிருக்கும் மாறுபாடுகளைக் காட்டுகிற நிலையான உத்தரவுகளின் ஐந்து நகல்களை சமர்ப்பித்துக் கொண்டு, இது விஷயமாய், சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தருக்கு விண்ணப்பம் செய்யவேண்டும்; தொழிலாளரின் உடன்பாட்டுடன் அம்மாறுபாடுகள் செய்யப்படுமிடத்து, அவ் உடன்படிக்கையின் சாட்சியப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றும் அவ் விண்ணப்பத்தோடு அனுப்பப்பட வேண்டும்.

(3) இவ்வாக்டில் மேற்கண்ட நிபந்தனைகள், முதலாவது நிலையான உத்தரவுகளை சாட்சியப்படுத்துவதற்குப் பிரயோகப்படுவது போன்று (2)-ம் உள்வகுப்பின்படியுள்ள ஒரு விண்ணப்பத்தின் காரியத்திலும் பிரயோகப்படவேண்டும்.

சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தருக்கும் அப்பீல் அதிகாரிக்கும், ஸிவில்கோர்ட்டுகளுள்ள அதிகாரங்கள் இருக்கும் என்பது.

11. ஒவ்வொரு சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தருக்கும் அப்பீல் அதிகாரிக்கும், தெளிவு வாங்குதல், பிரமாணமெடுக்கும்படி செய்தல், சாட்சிகளை ஆஜராகுமாறு நிர்பந்திக்கிறது, தஸ்தவேஜுகளை சோதனையிட்டு எடுத்து ஆஜராக்க நிர்ப்பந்தித்தல் ஆகிய இக்காரியங்களின் பொருட்டு ஒரு ஸிவில் கோர்ட்டுக்குள்ள சகல அதிகாரங்களையும் கொண்டிருப்பதன்றி, 1117-ம் ஆண்டைத்திய க்ரிமினல் ப்ரொஸீஜர் கோர்டின் (1117-ம் ஆண்டைத்திய 8-வது ஆக்ட்) 392, 394 என்னும் வகுப்புகளின் தாற்பரியப்படி ஒரு ஸிவில் கோர்ட்டாகக் கருதப்படவும் வேண்டும்.

நிலையான உத்தரவுகளுக்கு விரோதமாக வாய்மொழித் தெளிவுகள் அனுமதிக்கத் தக்கதல்ல.

12. இவ்வாக்டை அனுசரித்து முடிவாக சாட்சியப்படுத்தப்பட்டபடியுள்ள நிலையான உத்தரவுகளோடு புதியனபுகுத்துவதன் அல்லது அதில் வேறு விதம் மாறுபாடுகளோ முரண்பாடுகளோ வருத்துவதன் மூலம் ஏற்படுகிற பலனை உண்டாக்குகிற யாதொரு வாய்மொழித் தெளிவும் எந்தக் கோர்ட்டிலும் அனுமதிக்கத்தக்கதல்ல,

தண்டனைகளும் நடைமுறைகளும்.

13. (1) 3-வது வகுப்பில் வேண்டியவாறு நிலையான உத்தரவுகளின் நகலைச் சமர்ப்பிக்கவோ 10-வது வகுப்பனுசரித்தன்றி வேறு விதத்தில் தமது நிலையான உத்தரவுகளைத் திருத்தவோ தவறுகிற ஒரு முதலாளி ஐயாயிரம் ரூபாய் வரையுள்ள அபராத தண்டனைக்கு உள்ளாவார்; தொடர்ந்து வரும் ஒரு குற்றத்தின் விஷயத்திலே முதலாவது குற்றம் செய்த தேதியின் பின் அக்குற்றம் தொடருகிற ஒவ்வொரு நாளுக்கும் இருநூறு ரூபாய்வரையுள்ள அபராத தண்டனை விதிக்கக் கூடியதாகும்.

(2) தமது கைத்தொழில் ஸ்தாபனத்துக்கென இவ்வாக்டின்படி இறுதியாக ஸர்டிபை செய்யப்பட்ட நிலையா

ள உத்தரவுகளை மீறிச் செயலாற்றும் ஒரு முதலாளி, ஒரு நூறு ரூபாய் வரையுள்ள அபராத தண்டனையும் குற்றம் தொடர்ந்து செய்யப்படுமானல் முதலாவது குற்றம் செய்த தேதியின் பின் அக்குற்றம் தொடருகிற ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாய் வரையுள்ள அபராத தண்டனையும் விதிக்கப்படுவதற்கு உள்ளாவார்.

(3) நமது கவெர்ன்மென்டாரின் முன்னனுமதியோடல்லாது, மற்றப்படி இவ்வகுப்பின்படி தண்டிக்கத் தக்கதான ஒரு குற்றத்தின் பொருட்டு எந்த வழக்கும் தொடரப்படக்கூடாது.

(4) முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குக் கீழ்ப்பட்ட எந்த கோர்ட்டும் இவ்வகுப்பின் படிக்கான யாதொரு குற்றத்தை விசாரணை செய்யக்கூடாது.

நிவாரணை செய்யும் அதிகாரம்

14. இவ்வாக்டிற் கண்ட எல்லா நிபந்தனைகளினின்றும் அல்லது எவையேனும் நிபந்தனைகளினின்று ஏதேனும் கைத்தொழில் ஸ்தாபனத்தையாவது ஏதேனும் வகைக் கைத்தொழில் ஸ்தாபனத்தையாவது, நிபந்தனையின் பேரிலோ, நிபந்தனையன்றியோ, நமது கவெர்ன்மென்டார் நமது கவெர்ன்மென்ட் கெஸெட் விளம்பரத்தின் மூலம் நிவாரணை செய்யலாம்.

விதிகள் இயற்றும் அதிகாரம்.

15. (1) நமது கவெர்ன்மென்டார், முன்கூட்டியே பிரசுரம் செய்த பிறகு, இவ்வாக்டின் காரியங்களை நடத்துவதற்காக நமது கவெர்ன்மென்ட் கெஸெட் விளம்பரத்தின் மூலம் விதிகள் இயற்றலாம்.

(2) மேற்படி அதிகாரத்தின் பொதுத்தன்மைக்குப் பாதகமில்லாமலே, குறிப்பாக, ஷை விதிகள்—

(a) பட்டிகையில் உட்படுத்தப்பட வேண்டிய கூடுதல் காரியங்களையும், அக்காரியங்களுக்கு ஏற்ப இவ்வாக்டின் படி சாட்சியப்படுத்தப்பட்ட நிலையான உத்தரவுகளில் மாறுபாடு வருத்துவதில் அநுசரிக்கவேண்டிய நடைமுறைகளையும் நிர்ணயிக்கலாம்;

(b) இவ்வாக்டின் காரியத்துக்காக, மாதிரி நிலையான உத்தரவுகளை வகுத்துக் காட்டலாம்.

(c) சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தர், அப்பீல் அதிகாரி, ஆகியோரின் நடவடிக்கை முறையை நிர்ணயிக்கலாம்;

(d) நிலையான உத்தரவுகளுக்குரிய ரெஜிஸ்டரில் பதியப்பட்டிருக்கும் நிலையான உத்தரவுகளின் பிரதிகளைப் பெறுவதற்கு சுமத்தக் கூடிய கட்டணம் இவ்வளவென்று நிர்ணயிக்கலாம்;

(e) நிர்ணயிக்கப்படவேண்டிய அல்லது நிர்ணயிக்ககூடிய வேறு ஏதேனும் விஷயம்பற்றி நிபந்தனை செய்யலாம்;

ஆனால், (e) பகுதியின்படி எவையேனும் விதிகள் இயற்றப்படுமுன், முதலாளிகளதும் தொழிலாளிகளதும் பிரதிநிதிகளை நமது கவெர்ன்மென்டார் கலந்தாலோசிக்கவேண்டும்.

பட்டிகை.

(2 (f), 3 (2), என்ற வகுப்புகளைக்காண்க).

இவ்வாக்டின்படிக்கான நிலையான உத்தரவுகளில் நிபந்தனை ஏற்படுத்தப்படவேண்டிய காரியங்கள்.

1. தொழிலாளிகளைத் தரம் பிரிப்பது; அதாவது ஸ்திரமானவரா, தற்காலிகமானவரா, தொழில் பழகுவோரா அல்லது ப்ரொபேஷனர்களா என்றவாறு.

2. வேலையின் காலஅளவுகளும் மணிநேரங்களும், விடுமுறை நாட்கள், கூலி நாட்கள், கூலி நிரக்குகள் ஆகிய இவற்றை தொழிலாளிகளுக்குத் தெரியப்படுத்துதல்.

3. முறைவேலை புரிதல்.

4. ஆஜரும் பிந்திவருவதும்.

5. லீவு, விடுமுறை நாட்கள் ஆகியவைபற்றிய நிபந்தனைகளும், அவற்றிற்காக விண்ணப்பஞ் செய்யும் முறையும் அவற்றை அனுமதிக்கும் அதிகாரியும்.

6. பரிசோதனையிடப்படுவதற்கு உள்பட்டு, குறிப்பிட்ட வாதல்கள் வழியாக வளவில் பிரவேசிக்கவேண்டுமென்பது.

7. கைத்தொழில் ஸ்தாபன இலாகாக்களை மூடுவதும் மீண்டும் திறப்பதும், வேலைகளை தற்காலிகமாய் நிறுத்தி வைத்தல், அதனால் முதலாளிக்கும் தொழிலாளிகளுக்கும் ஏற்படும் உரிமைகளும் பொறுப்புகளும்.

8. உத்தியோகம் முடிவுறுவது; அதுபற்றி முதலாளியும் தொழிலாளிகளும் கொடுக்கவேண்டிய நோட்டீஸ்.

9. துர் நடத்தைக்காக தற்காலிகமாயோ நிலையாகவோ வேலையிலிருந்து நீக்குவது; இன்னவற்றைச் செய்தால் அல்லது செய்யாதிருந்தால் அது துர் நடத்தையாகுமென் பது.

10. முதலாளியோ அவரது ஏஜெண்டுகளோ பணி விடைக்காரர்களோ தொழிலாளிகளை அநியாயமாக நடத்தி னால் அல்லது அவர்களிடம் அநியாயமாய் வேலை வாங்கி னால் அதற்கெதிராய் தொழிலாளிகள் நிவிர்த்தி தேடுவதற்கு ரிய வழிகள்.

11. நிர்ணயிக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் விஷ யங்கள்.

உத்தேச காரணவிவரம்.

ஆள் எடுப்பது, பிரித்துவிடுவது, ஒழுங்குமுறை நடவ டிக்கை, விடுமுறை நாட்கள், லீவு முதலியன பற்றிய நிபந்த னைகளை வரையறுக்கும் "நிலையான உத்தரவுகள்", கைத்தொ ழில் முயற்சியில் ஈடுபடும் நிர்வாகத்தினருக்கும் தொழிலா ளிகளுக்கும் தம்மில் ஏற்படும் உரசலைக்குறைக்க சாலப்பயன் படும் என்பது அனுபவத்தில் கண்டறியப்பட்டிருக்கிறது. நூறு அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளிகளை வேலை யில் அமர்த்திக்கொள்ளும் கைத்தொழில் ஸ்தாபனங்கள் அனைத்திலும் "நிலையான உத்தரவுகள்" இயற்றுமாறு நிபந் தனை செய்ய இம்மசோதா கருதுகிறது.

2. 2 (d) பகுதியில் சொல்லப்பட்ட வகைக் கைத்தொ ழில் ஸ்தாபனங்களுக்கு இவ் ஆக்ட் முதல் முதலில் பிரயோ கப்படும், அதில், தொழிற்சாலைகள், ரெயில்வே ஆகிய இவை யன்றி, கனிகள் எண்ணெய்த்தளங்கள், மோட்டார் வாகன வொர்க்ஷாப்புகள், கப்பல் தொழிற்சாலைகள், கப்பற்துறைகள் ஜெட்டிகள், உள்நாட்டு நீராவிக்கலங்கள், பயிர்த்தோட்டங் கள், வேலைச்சாலைகள் ஆகியனவும் உட்படும். வேறு வகைக் கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கு இவ்வாக்டை வியாபிக்க வோ, தேவையாயிருக் குமிடத்து விளம்பரம் மூலம் நிவார ணை நல்கவோ கவெர்ன்மெண்டாருக்கு அதிகாரமிருக்கும்.

3. ஒரு கைத்தொழில் ஸ்தாபனத்திற்கு இவ்வாக்ட் செல்லும்படி செய்த தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் "நிலையான உத்தரவுகளின்" நகல் தயாரித்து, சாட்சியப்ப டுத்தும் பொருட்டு அதை "சாட்சியப்படுத்தும் உத்தியோ

நிர்ப்பந்திக்கிறது. அதற்குரிய பட்டியலில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா காரியங்களுக்கும், கவர்ன்மெண்டார் விதிகளின்படி நிர்ணயிக்கும் இதர காரியங்களுக்கும், ஒரு நிலையான உத்தரவுகளின் நகலில் அமைவுறவேண்டும். நகல்படுத்திய "நிலையான உத்தரவுகள்" பிரசுரமாய ஆகும்படி சாட்சியப்படுத்தக்கூடியதுவரை என்னும் வகையில் அவற்றில் மாற்றம் வருத்த அல்லது புதியன புகுத்த "சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தருக்கு" அதிகாரமிருக்கும். அவற்றின் தேர்வைப்பாடு அல்லது நியாயப்பாடு குறித்து, இப்படிச்செல்வது அவரது (அல்லது அப்பீல் அதிகாரியினது) அதுவல் அல்ல. "சாட்சியப்படுத்தும் உத்தியோகஸ்தரது" தீர்மானத்திற்கு எதிராய் அப்பீல் கொடுக்க உரிமை ஏற்படுத்தியிருக்கிறது.

4. கைத்தொழில் உத்தியோகத்தைப் பற்றிய (நிலையான உத்தரவுகள்) 1946-ம் ஆண்டத்திய (1946-ம் ஆண்டைத்து 20-வது ஆக்ட்) இந்திய ஆக்டை இம் மசோதா அடுத்துப் பின்பற்றுகிறது.

G. கேசவன்,

T. K. கோபாலன் நாயர்,
சர்க்கார் காரியதரிசி.

(A true translation)

M. C. KESAVA PILLAI,
Head Translator to Government.